LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

U.G. DEGREE EXAMINATION – **LANGUAGES**

SECOND SEMESTER – **APRIL 2023**

UTL 2101 – GENERAL TAMIL - II

Date: 05-05-2023 Dept. No. Max. : 100 Marks

Time: 01:00 PM - 04:00 PM

பகுதி அ *(10 X 2 =20)*

விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

1. ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுபெற்ற
பேரும் சதமல்ல பெண்டிர் சதமல்ல... - பொருள் விளக்கம் தருக.

2. தேடக் கிடையாத திரவியமே தேன்கடலே
ஈடுனக்கும் உண்டோ இறையே பராபரமே... இடம் சுட்டுக.

3. வாரிக் களத்தடிக்கும் வந்து பின்பு கோட்டை புகும்... விளக்கம் தருக.

4. வள்ளலார் – குறிப்பு வரைக.

5. மாயூரம் வேதநாயகர் எழுதிய நாவல்களைக் குறிப்பிடுக.

6. செண்பகராமன் பள்ளு – குறிப்பு வரைக.

7. பிள்ளைத்தமிழ் பருவங்களைக் குறிப்பிடுக.

8. உலா குறித்து எழுதுக.

9. தன் விவரப் பட்டியலில் இடம் பெறவேண்டியவற்றைப் பட்டியலிடுக.

10. பிழை நீக்கி எழுதுக.
அ) எஸ் நீ போகலாம். ஆ) ஒரு கப் டீ கொடு.

பகுதி ஆ *(5 X 7 =35)*

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.

11. திருமந்திரம் உணர்த்தும் வாழ்வியல் கருத்துகளை விளக்குக.

12. மூதுரையில் ஔவையார் வெளிப்படுத்தும் சிந்தனைகளை எடுத்துரைக்க.

13. பிள்ளைச் சிறு விண்ணப்பத்தின் வழி இராமலிங்க அடிகள் கூறும் செய்திகளை விவரிக்க.

14. நந்திக்கலம்பகத் தலைவி கார்ப்பருவம் கண்டு வருந்துவதையும் கவிஞரின் கையறு நிலையும் குறித்து விளக்கி எழுதுக

15. இடைக்காலப் புலவர்களின் இலக்கியப் பங்களிப்பை ஆய்ந்துரைக்க.

16. நாட்டுப்புற நம்பிக்கைகள் எனும் கட்டுரையில் அமைந்துள்ள கருத்துகளை விவரிக்க.

17. நாளிதழில் வெளியான வேலை வாய்ப்பு விளம்பரத்தைக் கண்டு கடிதம் ஒன்று எழுதுக.

பகுதி இ *(3 X 15 =45)*

மூன்று பக்க அளவில் விடையளிக்க.

18. நாச்சியார் திருமொழி வாயிலாக ஆண்டாள் கண்ட கனவினை விவரித்துரைக்க

(அல்லது)

முத்தொள்ளாயிரம் உணர்த்தும் மூவேந்தர்களின் சிறப்புகளைத் தொகுத்துரைக்க.

19. சிற்றிலக்கியங்களின் வகைகள் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

சித்தர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டு குறித்து விரித்துரைக்க.

20. தமிழர் வானியல் சிந்தனை எனும் கட்டுரை வெளிப்படுத்துவனவற்றை எடுத்துரைக்க.

(அல்லது)

சித்தர்களின் மண்ணுக்கேற்ற அறிவியல் எனும் கட்டுரை உணர்த்தும் கருத்துகளை விவரிக்க.

&&&&&&&&&&